www.prepp.in



# தமிழ் / TAMIL

## தாள் I / Paper I

## (இலக்கியம்) / (LITERATURE)

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

www.prepp.in

## SECTION A

**Q1.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக :** *10×5=50*

(a) திராவிட மொழிகளும் அவை வழங்குமிடங்களும் *10*

(b) தமிழில் மூவிடப் பெயர்களும் மூவிட வினைகளும் *10*

(c) தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் அமைப்பு *10*

(d) சங்க இலக்கியத்தில் உவமைகள் *10*

(e) பக்தி இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் *10*

**Q2.** (a) தமிழில் வட்டார வழக்குகள் குறித்து விவரிக்க *15*

(b) சிலப்பதிகாரத்தில் கிளைக் கதைகள் குறித்து ஆராய்க. *20*

(c) தமிழ் அற இலக்கியங்களின் இலக்கியப் பண்புகளை விரித்துரைக்க. *15*

**Q3.** (a) மணிமேகலைக் காப்பியத்தின் வாயிலாக அறியவரும் தருக்கதத்துவச் சிந்தனைகளை ஆராய்க. *20*

(b) தற்கால அரசியல் சமுதாய இயக்கங்களின் வழி தமிழ் இலக்கியமும் மொழியும் வளர்ந்த வளர்ச்சியை ஆராய்க. *15*

(c) தற்காலத் தமிழ்க் கவிதையின் இலக்கியக் கூறுகளைத் திறனாய்வு செய்க. *15*

**Q4.** (a) தமிழில் இருமொழியம் (BILINGUALISM) என்பதை ஆராய்க. *15*

(b) தமிழ் வரலாற்று நாவல்கள் பற்றி மதிப்பிடுக. *15*

(c) தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் படைப்புக்களைத் திறனாய்வு செய்க. *20*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

## SECTION B

**Q5.** பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : *10×5=50*

(a) உள்ளுறை உவமம் *10*

(b) தமிழில் ஒப்பாரிப் பாடல்கள் *10*

(c) இதழாளர் பாரதி *10*

(d) நடுகல் வழிபாடு *10*

(e) தமிழில் கலைச் சொல்லாக்கம் *10*

**Q6.** (a) தற்கால இலக்கியத் திறனாய்வு முறைகளை வகைப்படுத்தி விளக்குக. *20*

(b) இலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பின் பங்கு குறித்து ஆராய்ந்துரைக்க. *15*

(c) தமிழ்ச் சிந்தனை மரபின் வளர்ச்சிக்குத் திருக்குறள் ஆற்றிய பங்கினை மதிப்பிடுக. *15*

**Q7.** (a) ஒப்பிலக்கியக் கோட்பாட்டுப் பின்னணியில் தமிழ்க் கவிஞர் ஒருவரைப் பிறமொழிக் கவிஞரோடு ஒப்பிட்டு மதிப்பிடுக. *15*

(b) பண்பாட்டு மாற்றத்தில் மக்கள் தொடர்பு ஊடகங்களின் பங்கு குறித்துத் திறனாய்வு செய்க. *20*

(c) எதிர்ப்புக் குரல்கள் பதிவாகியிருக்கும் பாங்கை நாட்டுப்புற இலக்கியங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் வாயிலாக விளக்குக. *15*

**Q8.** (a) “காலந்தோறும் தமிழக மகளிர்” – ஆராய்க. *20*

(b) தமிழ் இசைக்கலை வரலாற்றை ஆராய்க. *15*

(c) தமிழர் நீர்மேலாண்மையியலை ஆராய்ந்து விளக்குக. *15*